AR
735

கழகத்தின் காவலன்

கே.வி.கே.சாமி

கட்டுரைகள்

செ.திவான்

கழகத்தின் காவலன்

கே.வி.கே.சாமி கட்டுரைகள்

(முதன் முறையாக நூல் வடிவில்)

பதிப்பாசிரியர்

செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,

நஜாத் பதிப்பகம்,
106-F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

ஆசிரியரின் 77–ஆவது நூல்

முதற் பதிப்பு : ஏப்ரல், 2009

உரிமை : ஆசிரியருக்கே

கணினி வடிவமைப்பு : நான்சி கணினியகம், பாளையங்கோட்டை.

அச்சிட்டோர் : சிவசக்தி அச்சகம், சிவகாசி.

முகப்போவியம் : N. சங்கர், பாளையங்கோட்டை

விலை : ரூபாய் இருபது

வீரவணக்கம்

'இலங்கையில்
போர் நிறுத்தம் வேண்டி
இன்னுயிர் ஈந்த தீரன்
கு. முத்துக்குமாருக்கு'

நூலினை வழங்குதல்

வழக்கறிஞர் **S. ஜோயல், BA., BL.,**
மாவட்ட செயலாளர்,
மறுமலர்ச்சி தி.மு.கழகம்,
260-E, V.M. காம்ப்ளக்ஸ்,
பால விநாயகர் கோவில் தெரு,
தூத்துக்குடி - 2.
செல்: *94431 66776*

கழகத்தின் காவலன் கே.வி.கே. சாமி

எண்ண அலைகள்

தென்னகத்தைச் சூழ்ந்திருந்த அறியாமை இருளை அகற்றி, பகுத்தறிவு ஒளியை ஏற்றிட வந்த தந்தை பெரியார், தமிழ்த் தாயின் தலைமகன் அறிஞர் அண்ணா காட்டிய வழியில் திராவிட இயக்கத்திற்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட தீரர்கள் ஏராளம்; ஏராளம்; இயக்கத்திற்காக தடியடிபட்டோர்; தண்டனைக்குள்ளானோர், சித்திரவதைக் குள்ளானோர், சிறைப்பட்டோர், வீடிழந்தோர், துணையிழந்தோர் ஏராளம்; ஏராளம். வீட்டை மறந்து, நாட்டை நினைத்து தங்களை மெழுகுவர்த்திகளாக்கிக் கொண்டு, தாயகத்தின் விடுதலைக்காக இரத்தம் சிந்தியவர்கள் கணக்கற்றோர்.

நம் கண்ணறையின் ஒளி படாமல், கல்லறையில் துயிலும் அவ் மாவீரர்கள் நம் கருத்தில் நிறைந்திருப்பவர்கள். இந்த மண்ணில் யாருக்கும் தாழாமல், தன்மானத்தோடு, சரிநிகர் சமமாக வாழவும், ஜனநாயகத்தால் ஆளவும் நமக்கு நாளும் நாளும் உத்வேகம் தந்து கொண்டு இருப்பவர்கள்.

அந்த உண்மைத் தீரர்கள் வரிசையில் திராவிட இயக்கத்தில் முன்னணியில் இருப்பவர் கழகத்தின் காவலன் கேவி.கே. சாமி.

அவரது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள் இதோ . . .

வெள்ளசாமி நாடார் – தேனம்மாள்

1924-ஆம் ஆண்டில் தமிழ் பங்குனி மாதம் புதன்கிழமை மேல ஈரால் கிராமத்தில் வெள்ளசாமி நாடார் - தேனம்மாள் தம்பதியருக்கு ஐந்தாவதாகப் பிறந்தது ஆண் குழந்தை. திரண்ட விழி, கருமை நிறமும் பெற்று இருந்தபடியால் அந்த ஆண் குழந்தைக்கு கருப்பசாமி என்று பெயர் சூட்டப்பட்டது. *1931*-ஆம் ஆண்டு வெள்ளைசாமி குடும்பத்தார் தூத்துக்குடிக்கு குடிபெயர்ந்தார்கள்.

தூத்துக்குடி காரப்பேட்டை பள்ளியில் – கால்டுவெல் ஹைஸ்கூலில்

கருப்பசாமி தனது *7*-வது வயதில் தூத்துக்குடி காரப்பேட்டை பள்ளியில் சேர்ந்தார் *(1931)*. தூத்துக்குடி கால்டுவெல் ஹைஸ்கூலில் தனது படிப்பினைத் தொடர்ந்த கருப்பசாமி அங்கு கால்பந்தாட்டம், டென்னிஸ், சங்கீதம், நாடகம் போன்ற பல துறைகளிலும் பங்கேற்று பல பரிசுகளைப் பெற்றார்.

சென்னையில் வேலை – குத்தூசி குருசாமி

கருப்பசாமி கால்டுவெல் ஹைஸ்கூலில் பத்தாவது வகுப்பு படித்து பரிட்சையிலும் தேறிவிட்டார். சமயோசிதமான புத்தியும் உத்தியும் கூர்மையும் சின்னஞ்சிறு வயதிலிருந்தே தெளிவாய் காணப்பட்டார். மிகக் குறைந்த நேரத்தில் மிகுந்த வேலையைச் செய்து முடிக்க ஆசைப்படுவார். சென்னையில் ஷார்ட்ஹேண்ட் டைபிரட்டிங் படித்து முடித்தார்.

1941-இல் 17-வது வயதில் சென்னை கார்ப்பரேசனில் அலுவல் பார்ப்பதற்கு ஏற்பாடாகியது.* குத்தூசி குருசாமி போன்றவர்கள் உதவி புரிந்தனர். சுமார் மூன்று வருடங்கள் ஓடி மறைந்தது. நாட்கள் செல்லச் செல்ல கருப்பசாமியின் சிந்தனையும் வேறு வழியில் திரும்பிவிட்டது. உத்தியோக தோரணையில் அவருக்கு சிறிதும் விருப்பம் ஏற்படவில்லை.

சுயமரியாதை இயக்க வளர்ச்சி

தூத்துக்குடியில் சுயமரியாதை இயக்கம் நன்கு வளர்ந்து கொண்டிருந்தது.

நீதிக்கட்சி உறுப்பினர்

தூத்துக்குடியில் சுயமரியாதை இயக்கம் வேகமாக வளர்ந்து வந்த வேளையில், சென்னையில் சுயமரியாதை இயக்கத்தில் முக்கியத் தொண்டராக இருந்து பணியாற்றியவர் கருப்பசாமி.

14–வது மாகாண நீதிக்கட்சி மாநாடு

தந்தை பெரியார் அவர்கள் சிறையிலிருந்தபோதே 1938 டிசம்பர் 29, 30, 31 ஆகிய நாட்களில் சென்னை தீவுத் திடலில் 14-வது மாகாண நீதிக்கட்சி மாநாடு நடைபெற்றது. அதில் கலந்து கொண்டவர் கருப்பசாமி.

சேலம் மாநாடு

1944 ஆகஸ்ட் 27 சேலம் மாநாடு; 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்ற பெயரில் துவங்கப்பட்டு, 'நீதிக்கட்சி' என்று அழைக்கப்பட்ட இயக்கம் 'திராவிடர் கழகம்' என்ற புதுப்பெயரைப் பெற்றது. அறிஞர் அண்ணாவின் 'அரிய முழக்கம் ஒலித்தது. நாமார்க்கும் குடியல்லோம்' என்று நம் மக்கள் பரணி பாட வேண்டும். அந்தப் பரணி தரணியெல்லாம் ஒலிக்க வேண்டும்'

---

* குருவிக்கரம்பை வேலு, கழிஞ்சூர் செல்வராஜு தந்த தகவல்..

என்ற அண்ணாவின் இன முழக்கம் திராவிடர் கழகமாக உருவானது.

திராவிடர் கழகத்தில்

கருப்பசாமி திராவிடர் கழகத்தில் உறுப்பினரானார். தூத்துக்குடியில் கழகத் தோழர்களுடன் சேர்ந்து மகிழ்வுடன் இயக்கப் பணிகளை ஆற்றத் தொடங்கினார்.

ஞாயிறுதோறும் தண்ணீர் தாங்கியில்

கழகத் தோழர்களுடன் கலந்து பேச்சாற்றலை வளர்த்துக் கொண்டார் கருப்பசாமி. ஞாயிறுதோறும் தம் தோழர்களுடன் தூத்துக்குடி தண்ணீர் தாங்கியில் இருந்து கொண்டு சீர்திருத்தப் பாடல்களைப் பாடி மகிழ்வார் கருப்பசாமி.

கே.வி.கே. சாமி

கருப்பசாமி (முதாதையர்)	–	K
வெள்ளசாமி நாடார் (தந்தையார்)	–	V
கருப்பசாமி	–	K. சாமி

வெள்ளசாமி நாடார் மகன் கருப்பசாமி கே.வி.கே. சாமி ஆனார். கழகத் தோழர்கள் 'சாமி' என்று அன்புடன் அழைக்கலாயினர்.

திராவிட நாட்டின் கவர்னர் பதவி

கே.வி.கே. சாமி பற்றி 08.05.1948, 09.05.1948-இல் நடைபெற்ற தூத்துக்குடி மாநாட்டில் தந்தை பெரியார் புகழ்ந்துரைத்தது இதோ ...

விளையாட்டுப் பிள்ளையல்ல! வினையாற்றும் கர்ம வீரர்!

"நான் தோழர் கே.வி.கே. சாமி அவர்களை இதுவரை ஒரு விளையாட்டுப்பிள்ளை என்று நினைத்திருந்தேன். அவர் இம்மாநாட்டுச் செயலாளராயிருந்து பணியாற்றியதைப் பார்த்ததிலிருந்து அவர் இத்திராவிட நாட்டின் **கவர்னர் பதவியைக் கொடுத்தால்கூட அதையும் பார்த்துக் கொள்ளக்கூடிய திறமை பெற்றிருக்கிறார் என்று கூற வேண்டியிருக்கிறது.**

தொழிற்சங்கத் தலைவர் கே.வி.கே. சாமி

அதன்பின், அறிஞர் அண்ணாவின் திமுகழகத்தில் அயராது பணிகளை மேற்கொண்டார் கே.வி.கே. சாமி.

பல ஆண்டுகளாய் தொழிலாளிகளின் நலனுக்காக தொண்டு செய்வதிலே காலம் கழித்தார். கே.வி.கே. சாமியின் சேவையும் செயலும் பல தொழிற்சங்கங்களுக்கு அவரைத் தலைவராக்கியது. பஞ்சாலை, உப்பு தொழிற்சங்கம், கைவண்டி தொழிற்சங்கம் போன்ற பல சங்கங்களுக்குத் தலைவராக இருந்து தொண்டாற்றினார் கே.வி.கே. சாமி.

ஜில்லா கடத்தல் உத்தரவு

உப்புத் தொழிலாளத்தோழர் கருமலையார் 03.09.1950-இல் திடீரெனத் தாக்கப்பட்டார். 05.09.1950-இல் உப்புத் தொழிலாளர் சங்கத் தலைவர் கே.வி.கே. சாமி, செவத்த பாண்டியன் மற்றொரு தோழர் ஆகியோர் கைது செய்யப்பட்டார்கள். 10,000 தொழிலாளர்கள் ஊர்வலமாக வந்து தூத்துக்குடி போலீஸ் நிலையத்தைச் சுற்றி நின்று, 'எங்கள் தலைவர் கே.வி.கே. சாமியை விடுதலை செய்யுங்கள்' என்று முழங்கினர். ஆளவந்தாரின் அடக்குமுறை, தடியடிப் பிரயோகம் அத்தனையும் நடைபெற்றது. 06.09.1950 மாலையில் செவத்த பாண்டியனும், மற்றொரு தோழரும் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால் கே.வி.கே. சாமியை ஜில்லா கடத்தி சர்க்கார் மறு உத்திரவு கிடைக்கும் வரை நெல்லை மாவட்டத்திற்குள் வரக்கூடாது என்று கட்டளையிட்டது அரசாங்கம்.* அந்த அளவிற்கு மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தவர் கே.வி.கே. சாமி.

27.03.1952

தூத்துக்குடி தொகுதிக்கான தேர்தல் நடைபெற்றது. 40965 வாக்குகள் பதிவானதில் 19728 வாக்குகள் மட்டுமே பெற்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் ரோச் விக்டோரியா வெற்றி பெற்றார். 1952-இல், கழகம் தேர்தலில் போட்டியிட முடிவெடுத்திடாத காலத்திலே, சுயேச்சையாகப் போட்டியிட்டு கே.வி.கே. சாமி பெற்ற வாக்குகள் 11957. அனைத்துத் தரப்பு மக்களின் மத்தியிலும் கே.வி.கே. சாமி பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தார் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

மாவட்டச் செயலாளர்

10.04.1955-இல் மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கே.வி.கே. சாமி கழகத்தின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் காரியமாற்றத் துவங்கினார்.

---

* திராவிட நாடு, 17.09.1950, ப. 3.

20.09.1956 இரவு 9.30 மணி

பொதுஜன விரோதிகள், வெகுஜன விரோதிகள், கருங்காலிகள், திடீரென்று சில பேர் பாய்ந்து தாக்கினர். பல ஆயுதங்களால் தாக்கப்பட்டு கே.வி.கே. சாமி 9.30 மணி அளவில் உயிர் துறந்தார். அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். மற்றும் கழக முன்னணியினர் அவர் மறைவு கேட்டு பெரும் துயருற்றனர்.*

திராவிட இயக்க சரித்திரத்தில் வாழும் கே.வி.கே. சாமி தந்தை பெரியாரின் 'குடிஅரசு' ஏட்டில் பல கட்டுரைகளைத் தீட்டியுள்ளார். இந்தக் கட்டுரைகள் 1948-ஆம் ஆண்டையொட்டிய அன்றைய காலகட்ட அரசியல் சூழ்நிலையில் எழுதப்பட்டவை என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தந்தை பெரியாரின் திராவிடர் கழகத்தில் அன்று கே.வி.கே. சாமி பணியாற்றியபோது எழுதிய கட்டுரைகள் இவை என்பதனையும் கருத்தில் கொண்டு, தோழர்கள் வாசித்தறிந்திட வேண்டுகிறேன். காலகதியில் அவை மறந்து போய்விடக் கூடாது என்பதால் முதன் முதலில் கே.வி.கே.சாமி தீட்டிய கட்டுரைகளை நூல் வடிவில் தந்துள்ளேன்.

இந்த நூல் வெளிவர உதவிய சகோதரர் மறுமலர்ச்சி தி.மு.கழக தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் S.ஜோயல் அவர்களுக்கும், திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடி கழிஞ்சூர் செல்வராஜு அவர்களுக்கும், சென்னை புத்தக வணிகர் திரு. சுப்பாரெட்டி அவர்களுக்கும், நூலினை நல்ல முறையில் அச்சிட்ட சிவசக்தி ஆர்ட்ஸ் கு. குமரேசன், நான்சி கணினியகம், கா. சுப்பிரமணியன் ஆகியோருக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை
எழுதுவதற்காக வாழ்கிறேன்.

06.04.2009
பாளையங்கோட்டை

செ. திவான்,
106F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

---

* செ. திவான் எழுதிய கழகத்தின் காவலன் கே.வி.கே. சாமி எனும் நூலில் அவரது வாழ்க்கை வரலாற்றை விரிவாகக் காணலாம்.

மந்திரி மாதவமேனன் மது அருந்தினார்?

என்ன ஆச்சரியம்! மந்திரி மாதவமேனன் மது அருந்தினாரா! அரசாங்கம் மதுவை ஒழித்துக் கட்டிய இந்நாளிலா? அதுவும் மந்திரியாக இருந்துகொண்டா? இந்த அக்கிரமமான காரியத்தைச் செய்தார்? என ஒவ்வொருவரும், திகைப்பும், கொதிப்பும் அடைவீர்கள். இந்த அளவுக்கு மனதைச் செல்ல விட்டு விடாதீர்கள். மந்திரி மது அருந்தவில்லை. மதுவைவிட கடும் போதையை உண்டு பண்ணி, புத்தியைத் தடுமாறச் செய்யும் வேறு எதையோ அருந்தி இருக்கிறார். அதனால் கன்னா, பின்னா என்று உளறிக் கொட்டுகிறார். நாட்டோர் கண்டு எள்ளி நகையாடும் அளவுக்கு இப்பேர்ப்பட்டவரை மது அருந்தினார் என்று கூறுவது தவறாகதல்லவா?

அந்த அளவுக்கு அவர் என்ன உளறிக் கொட்டி விட்டார் என்று அறிய நீங்களும் ஆசைப்படுவீர்களல்லவா? படியுங்கள்.

“இந்தக் கருப்புச் சட்டைக்காரர்கள் தமிழைக் காப்பாற்றுவதாகச் சொல்லி சில்லரைக் கலாட்டாக்கள் செய்து வருகிறார்கள். சென்ற மாதம் நானும் ஸ்ரீ. பக்தவத்சலமும், கோயில்பட்டிக்குப் போயிருந்த சமயம் சிறு பையன்கள் கருப்புக்கொடி யேந்தி, மந்திரியே திரும்பிப்போ எனக் கோஷமிட்டார்கள். அதில் ஒரு பையன் என்னை அடையாளம் தெரியாமல் கோஷமிட்டான். நான் அந்தப் பையனைக் கூப்பிட்டு, தம்பி,! நான் இந்த தேசத்தான். இந்த நாட்டிலே தான் பிறந்தேன். எங்கே போவது என்று கேட்டவுடனே அந்தப் பையன் ஒரேயடியாக அழ ஆரம்பித்து விட்டான். எனக்குக் காசு கொடுத்தார்கள். அதற்காகச் சொன்னேன், இனிமேல் சொல்லவில்லை” என்பதாகப் பேசியுள்ளார் விருது நகரில் இது 15-10-48 சுதேசமித்திரனில் வெளிவந்திருக்கிறது.

மேலே கண்ட வாசகத்தைப் படித்ததும் திடுக்கிட்டேன் பொறுப்பு வாய்ந்த மந்திரியா இவ்விதம் பேசி இருக்கிறார் என்று! என்னை என்னாலேயே நம்பமுடியவில்லை அந்த வாசகத்தைக் கண்டு, மீண்டும் மீண்டும் வாசித்தேன். மந்திரி மாதவமேனன்தான் பேசி இருக்கிறார். தோழர் மாதவ மேனன் கனம் ஆகிவிட்டபடியால் எப்படியும் பேசலாம். மக்கள்

நம்பிவிடுவார்கள் என்று எண்ணிவிட்டார் போலும். இல்லாவிட்டால் இவ்விதம் பிதற்றி இருக்கவே மாட்டார்.

திராவிடக் கழகத்தாரைப் பார்த்து, கூலிகள் என்றோ, காலிகள் என்றோ, வீணர்கள் என்றோ சொன்னால் நம்பும் காலமா இது? அதுவும் நெல்லை மாவட்டத் திராவிடக் கழகத் தோழர்களுக்கா இந்தப் பட்டம்? லட்சியமே (திராவிட நாடே) பிறப்புரிமையாகக் கொண்ட நெல்லை மாவட்டத்திலா கூலிப்பட்டாளங்கள்! எஃகுவாயந்த உள்ளத்தைக்கொண்ட நெல்லை மாவட்டத்திலா வீணர்கள்? ஒரு கேள்விகேட்டு ராசகோபால் ஆச்சாரி அவர்களை கிடுகிடுத்து, விரைத்துப் போகும்படி செய்த நெல்லை மாவட்டத்திலா கனம் மாதவமேனன் கேள்விக்குக் கண்ணீர்? சோசியலிஸ்ட் கூட்டத்தில் கல்லெறிந்த தேசீயத் தோழரைப் பார்த்து ஏ! தேசீய நண்பனே! இக்கூட்டத்தில் கல் எறிந்ததுபோல், திராவிடக் கழகக் கூட்டமானால் இக்கல்லை எறிந்திருப்பாயா? உன்னால் எறியத்தான் முடியுமா? என பொதுக்வட்டத்தில் பேசிக் கொண்டிருந்த தோழர் முழக்கமிட்ட கோவில்பட்டியிலா, மந்திரி மாதவமேனன் சொன்ன நிகழ்ச்சி நடந்தது! இல்லை! இல்லை! இல்லவே இல்லை. மந்திரி மாதவமேனன் மதுவினும் கொடிய மற்றொன்றை அருந்தி இவ்விதம் பிதற்றி இருக்கிறார். உண்மையாகவே அன்று நடந்தது என்ன தெரியுமா?

மந்திரி மாதவமேனன் கோயில் பட்டிவந்த அன்று நானும் அங்கு இருந்தேன். இருந்தது மட்டுமல்ல புகைவண்டி நிலையத்திற்கும் சென்றிருந்தேன். சென்றிருந்தது மட்டுமல்ல, மாதவமேனன் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தேன். இவ்விதம் மந்திரியாரைப் பார்க்கவேண்டும் என்று நான் ஆசைப்பட்டதின் காரணம், அன்று கோயில்பட்டியில் மந்திரிகளுக்கு கருப்புக் கொடிபிடிக்காது தடுக்க பலத்த போலீஸ் பாதுகாப்பு இருந்தது. புகைவண்டி நிலையத்திலும் பிரயாணிகளைத் தவிர வேறு எவரையும் அனுமதிக்கவில்லை. இவ்விதம் கட்டுக் காவல் அதிகமாக இருந்ததால் கருப்புக்கொடியை தரிசிக்கும் பாக்கியம் மந்திரியாருக்கு கிடைக்காதோ என மனவருத்தத்துடன் இருந்தேன். உடன் எனது நண்பர் (சின்னதுரை) வந்து, காவல் எவ்வளவு கெடுபிடியாக இருந்தாலும் கருப்புக்கொடி காட்டும் காட்சி நடந்தே தீரும். இல்லாவிட்டால் மந்திரியாரின் நன்றியை மறந்தவர்களாவோம் எனக் கிண்டலாகவும் சொல்லிச் சென்றார். இவ்வளவு சொன்னால்

போதாதா? ஓட்டமாய் ஓடினேன் புகைவண்டி நிலையத்தைத் தேடி. தூத்துக்குடிக்கு டிக்கட்டும் எடுத்துக் கொண்டேன். பிளாட்பாரத்திற்குள்ளும் சென்றேன். கைகாட்டியும் என் ஆவலைப்பூர்த்தி செய்ய உடன் இறங்கி விட்டது. பின்வண்டி வருவதும் தூரத்தில் தெரிந்தது. அத்துடன் கருப்புக் கொடிகளும் தெரிந்தது. என் உள்ளமும் குளிர்ந்தது. வண்டி நெருங்க, நெருங்க, கோஷங்களும் கேட்டது. அருகில் வண்டிவந்ததும், மந்திரிகளே திரும்பிப் போங்கள் என்றகோஷம் வானைப் பிளந்தது. பாதுகாவலுக்கு நின்ற போலீஸ் தோழர்கள் எல்லோரும் பேந்தப் பேந்த விழித்தார்கள். இவர்கள் எப்படி இந்த முன்னேற்பாடுகள் செய்தார்கள் என்று. உடன் கனம் மாதவமேனன் தன் சகாக்களுடன், எதையோ பறிகொடுத்தவரைப்போல் வண்டியை விட்டு கீழிறங்கினார். கோஷம் நின்றபாடில்லை. மந்திரியாருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவருக்கு ஆறுதல் கூறவோ வரவேற்கவோ அப்பொழுது அவர் பக்கத்தில் அவரின் சகபாடிகளையும் காணோம். அந்த நேரம்தான் தன் பக்கத்தில் நின்று கோஷமிட்ட செயராசு என்னும் தோழரைப் பார்த்து, தம்பி என்னை எங்கே போகச் சொல்லுகிறாய் எனக் கேட்டார். உடன் அத்தோழர், வடநாட்டிற்கு வால் பிடிக்கும் நீங்கள் வடநாட்டிற்குப் போங்கள் எனப் படார் என்று அறைந்தார். மந்திரியாரின் சிவந்தமுகம் கருத்துவிட்டது. அவரது வாழ்க்கைத் துணைவியாரோ தலை குனிந்து விட்டார். எதுவும் நடைபெறாது என்று எக்காளத்துடன் இருந்த காங்கிரஸ் நண்பர்களுக்கு இத்திடீர் ஏற்பாடு அதிர்ச்சியைக் கொடுத்தது மரக்கட்டைகளைப்போல் நிற்கும் சக்தியைக் கொடுத்து விட்டது. இதுதெளிய ஏறக்குறைய பத்து நிமிடங்கள் ஆகி இருக்கலாம். அதற்கப்பால் போலீஸ் பாதுகாவலுடன் வெளியே அழைத்துச் சென்றார்கள். இதுவே அன்று நடந்த நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியையே தற்புகழ்சியாகக் கூறியிருக்கிறார் மந்திரியார். அதுவும் நிகழ்ச்சி நடந்த சுமார் ஒன்றரை மாதத்திற்குப்பின் இவ்விதம் மந்திரியார் மறக்க முடியாத நிகழ்ச்சியானால் எவ்வளவு ஆழப்பதிந்திருக்கும் அவர் மனதில். பாவம் அவருக்கல்லவா தெரியும் அவர் பட்டபாடு! என்ன இருந்தாலும் கோவில்பட்டித் தோழர்கள் இவ்விதம் செய்திருக்கக் கூடாதுதான். ஏனெனில் கணவருக்குக் கிடைக்கும் மரியாதையைக் கண்டு உள்ளம் பூரிப்படைய, மந்திரியாரின் வாழ்க்கைத் துணைவியும் வந்திருக்கிறார் பாருங்கள்! அதற்காகத்தான்.

மக்களின் மனோ நிலை கருப்புக் கொடி பிடிப்பதிலிருந்து மாறி அமைச்சரை அவர் தம்பீடத்திலிருந்து கீழே பிடித்துத் தள்ளும் அளவுக்கு மனோநிலை மாறினாலும், மந்திரியாரின் மனோநிலை மாறாது. காரணம், பதவி மோகம், பணவெறி, இந்த வெறி இருக்கும் வரைக்கும், நடந்தவைகளை திரித்துக் கூறுவது மட்டுமல்ல, வேறு எதையும்கூட செய்வர்.

கோவில்பட்டித்தோழர்கள் பணம் கொடுத்தார்கள். கூச்சல் போட்டேன் என்று சொன்னதைக் கேட்டதும், கண்ணீர் வடித்ததை கனம் மாதவமேனன் பார்த்ததும் உண்மையாக இருக்குமேயானால், பொது மக்கள் கூடியுள்ள ஓர் பொதுக் கூட்டத்திலே நான் வந்து நிற்கிறேன். அம்மேடையில் கனம் மாதவமேனன் தோன்றி தாம் சொல்வதை நிரூபிக்க முடியுமா? முடியுமானால் கூட்டத்தைக் கூட்டட்டுமா? நாளைக் குறிப்பிட்டு அழைப்பு அனுப்பட்டுமா? ஆனால் ஒன்று, எங்கு வரவழைத்து மீண்டும் கருப்புக்கொடி பிடிக்கப் போகிறார்களோ! என அஞ்சினாலும் அஞ்சலாம். இந்த அழைப்புக்கு கனம் மாதவமேனன் ஒப்புக்கொள்வாரேயானால் அவரைப்பாண்டு வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லத் தயாராய் இருக்கிறோம். தயார்தானா?

கனம் மந்திரியார் கூறியது போல் திராவிடர் கழகத்தில், கூலிக்குமாரடிக்கும் கூலிப்பட்டாளங்களோ, கேள்வியைக் கண்டதும் கண்ணீர் வடிக்கும் தொடை நடுங்கிகளோ கிடையாது. திராவிடர் கழகத்தில் ஈடுபட்டு தியாகம் செய்தால் திராவிடர் கழக அரசில் 5 ஏக்கர் நிலத்திற்கு தியாகி மனு விண்ணப்பிக்கலாம் எனக்கருதும் ஆகஸ்ட் தியாகிகள் திராவிடர் கழகத்தில் கிடையாது! அர்த்த ராத்திரியில் ஊருக்கு வெளியே இருக்கும் தந்திக் கம்பிகளை அறுக்கும் ஆண்மையாளர்கள் திராவிடர் கழகத்தில் கிடையாது! ஆள் நடமாடாத இடத்திலே, ஒருவர் முகம் இன்னொருவருக்குத் தெரியாத சந்தர்ப்பத்தில் போய் தண்டவாளங்களைப் பெயர்த்து எடுக்கும் பெரும் பலம் படைத்த வீரர்கள் திராவிடர் கழகத்தில் கிடையாது! மூலை முடுக்குகளிலே உள்ள தபால் பெட்டிகளைக் கொளுத்தும் சூராதி சூரர்கள் திராவிடர் கழகத்திலே கிடையாது! இனிப்பைக் கொடுத்து ஏய்த்து ஆள்களைத் திரட்டும் தலைவரும் திராவிடர் கழகத்தில் கிடையாது! ஆசை வார்த்தைகளைச் சொல்லிப் போர் முனைக்கு அழைத்துச் செல்லும் தளபதிகள் திராவிடர் கழகத்தில்

கிடையாது! போர்! போர்!! தன் மானப் போர்!!! விடுதலைப் போர்! புறப்படுகிறாயா? போரில் ஈடுபடு, போர்முனைக்குப் புறப்படு. களத்திலே போரிடு! கூலி என்ன? என்று கேட்டுவிடாதே! குடும்பத்திற்கு வழி என்ன என்றும் கேட்டுவிடாதே! போர் மடிந்த பின்பும் கூட ஏதாவது உண்டா என்று கூடக்கேட்டுவிடாதே! இதற்கெல்லாம் இஷ்டப்பட்டால் போரில் ஈடுபடு! வீட்டைவிட்டுக் கிளம்பும் பொழுது மரணசாசனம் எழுதி வைத்துவிட்டு வந்துவிடு என்று கூறிடும் தலைவரே எம்மிடம் உண்டு. அதன்படியே கட்டளையும் பிறப்பித்து விட்டார். அதற்கு உடன் பட்டே ஆயிரம் ஆயிரம் வாலிபர்கள் இன்று பெரியாரைச் சுற்றிக்கொண்டு திரிகிறோம் என்பதை மந்திரியார் உணரட்டும்! அவர் எப்படி உணரப் போகிறார் அவருக்குத்தான் ஒரு நிலை இல்லையே!*

* குடிஅரசு, 23.10.1948, பக். 7, 11

சிறை பாசறையாக வேண்டும்

சென்னை மாகாணத்தில் ஆகஸ்டு 15-ஆம் தேதிக்கு முன்னதாகச் சிறைப்பட்டோர் மொத்தம் 21 ஆயிரம் என்றும், அவர்களின் ஆகஸ்டு 15 சுதந்திர தின விழாவை ஒட்டி நான்கு ஆயிரம் கைதிகளை விடுதலை செய்யப்போவதாகவும் ஆட்சி மன்றத்தின் அறிக்கைகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. அதன்படியே சுதந்திரதின விழாவின் காரணமாக நான்கு ஆயிரம் கைதிகள் விடுதலையும் செய்யப்பட்டார்கள்.

ஆனால் நான்கு ஆயிரம் கைதிகளை விடுதலை செய்த சுமார் 2½ மாத காலத்திற்குள் மீண்டும் நான்கு ஆயிரம் கைதிகள் அந்த இடத்தைப் பூர்த்தி செய்து, முன்பு உள்ள 21 ஆயிரம் என்ற எண்ணை எட்டிப்பிடித்திருப்பார்கள் என்றே எண்ணுகிறேன்.

கோட்டை கொத்தளங்களை முற்றுகை இட விரைந்து செல்லும் வீரர்களைப்போல் சிறைச்சாலையை நோக்கிப் பாய்ந்து செல்லுவதின் மூலகாரணம், நாட்டிலே ஏற்பட்ட வறுமையும், மக்களிடத்திலே குடி கொண்டுள்ள அறியாமை என்ற மூடப்பழக்கம் வழக்கங்களும், கல்வி இல்லாமையும், உலகானுபவங்களை உணர்ந்து கொள்ள முடியாத நிலையுமே ஒழிய வேறு காரணங்கள் யாதும் இல்லை என்று துணிவுடன் கூறலாம்.

சிறையில் அடைப்பட்டுக் கிடக்கும் கைதிகளில் 100-க்கு சுமார் 95 பேர்கள் களவு செய்தும், பாக்கிப்பேர்கள் கொலை, சண்டை போன்ற சில்லரைச் சச்சரவுகளின் காரணமாகவும் தான், சிறையில் அடைப்பட்டுக்கிடக்கிறார்கள் இந்தப் பரிதாகபரமான நிலையில் உள்ள இக்கைதிகள் எல்லோரும் குற்றவாளிகள் தானா? தண்டனைக்கு உரியவர்கள் தானா? சிறையில் அடைபட வேண்டியவர்கள் தானா? என்றால் உடனே ஆம் என்று கூறிவிடுவீர்கள். ஆனால், மறுவினாடி கொஞ்சநேரம் சிந்தனை செய்து, ஏன் திருடினான்? ஏன் கொலைசெய்தான்? என்ற கேள்விகளை எழுப்பி, பதில் சொல்ல ஆரம்பித்தால் குற்றவாளிகள் அல்லாத நிரபராதிகளே சிறைச் சாலையில் அடைப்பட்டு வதைபடுகிறார்கள் என்றே சொல்ல நேரிடும்.

ஏனெனில் நாட்டிலே ஏற்பட்ட வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும், தலைவிரித்தாடி, மக்களைக் கசக்கிப் பிழிய ஆரம்பித்து விடுகிறது. இந்த இன்னலிலே அகப்பட்ட தோழன், வறுமையிலிருந்து தன்னை விடுவிக்க வழி கண்டு பிடிக்கிறான். அதன்படியே எங்கும் அலைகிறான் வேலையைத்தேடி பலரிடம் மன்றாடி அடிபணிந்து வேண்டுகிறான். கெஞ்சுகிறான். கண்ணீர் வடிக்கிறான். கண்ட பலன் ரத்தக்கண்ணீர்தான். வறுமை அவனை வாட்டி வதை செய்கிறது. தன்னோடு எவ்வளவோ போராடித்தான் பார்க்கிறான். தன்னைக் கட்டுப்படுத்தவும் முயற்சிக்கிறான். ஒன்றும் முடியவில்லை. தற்கொலை செய்து கொள்ளலாமா என்று கூட யோசிக்கிறான். ஆனால் அதற்கு அவன் மனம் மறுத்துவிட்டு, ரத்தக் கொதிப்பைக் கிளறி ஆவேசத்தை மூட்டிவிடுகிறது. இந்த வேகத்திலேயே கிளம்பி விடுகிறான். திருடுவதற்கு ரொட்டித் துண்டு அளவேனும் திருடிவிட்டு, கிளிக்கூண்டிலே ஏற்றப்பட்டு, குற்றவாளியாக்கப் பட்டு சிறையில் தள்ளப்பட்டு விடுகிறான்.

ஒரு சிலர் கேட்கலாம். வறுமையானால் மட்டும் தானா களவுசெய்கிறார்கள் என்று. இல்லை, பேராசையின் காரணமாகவும் களவு செய்வோர் உண்டு. தரையிலே படுப்பவன், பாயிலே படுப்பவனைப் பார்த்துப் பொறாமைப்படுவதும், பாயிலே படுப்பவன், சமுக்காளத்திலே படுப்பவனைப் பார்த்துப் பொறாமைப்படுவதும், சமுக்காளத்திலே படுப்பவன் பஞ்சணை மெத்தையிலே படுப்பவனைப் பார்த்துப் பொறாமைப்படுவதும் இயல்பு. முறையுங்கூட ஏனெனில் மனிதவர்க்கம் நாகரீகமாகவும், சுகபோகங்களையும் அனுபவிக்க வேண்டும். பிறிதொரு சாரார் சுகபோகங்களை இழந்து வாழ்வதுமான நிலை நமது நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. எனவே மேலான வாழ்வு வாழ்பவர்களைப் போல நாமும் வாழவேண்டும் என்ற எண்ணம், சுகவாழ்வு அற்றோருக்கு ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் அந்த அளவுக்கு அவர்களுக்குப் பணவசதியில்லாமல் போய்விடுகிறது. அவர்கள் கண்ட ஒரேவழி களவு ஒன்றுதான். எனவே அந்த முறையைக் கையாளுகிறார்கள். அதற்குக் கிடைக்கும் பரிசு சிறை ஒன்றுதான்.

கொலை குற்றவாளிகளின் நிலையைக் கவனித்தாலும் அற்ப விஷயமாகத்தான் இருக்கிறது. சாதிச் சண்டை, சமயச்சண்டை, குடும்பச் சண்டை போன்றவைகளினால் தான் சச்சரவு ஏற்பட்டுக் கொலை போன்ற மாபாதகச் செயல்கள் நடைபெற்று விடுகின்றன.

இதற்கெல்லாம் மூலகாரணம் அரசாங்கம் தான் என்று மலை உச்சியினின்றும் கூறத் தயாராய் இருக்கிறேன். ஏனெனில் நாட்டு மக்கள் உள்ளத்திலே, வெறுப்பையும் கொதிப்பையும் உண்டுபண்ணக் கூடிய அளவுக்கு மேல்சாதி, கீழ்சாதி என்ற ஆயிரக்கணக்கான பிளவுகள் நாட்டிலே ஏற்பட்டு விபரீத விளைவுகளை உண்டு பண்ணிக் கொண்டிருப்பதைக் கவனியாது, சிந்திக்காது, அதை ஒழிக்க முயற்சி எடுக்காத அரசாங்கம், இதன் காரணமாக குற்றமடைபவர்களுக்குத் தண்டனை கொடுப்பது எந்த வகையில் நேர்மையாகும்? இதே போல் களவு செய்பவர்கள். ஏன்? திருடுகிறார்கள்? என்ற கேள்வியை எழுப்பிச் சிந்தனை செய்தால், திருடுகிறவர்களுக்கு தண்டனை கொடுக்கும் அரசாங்கமே குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட வேண்டியதேற்படும் என்று அறிவுலகம் நிச்சயமாகக் கூறும்.

ஏனெனில், உண்மையாகவே மக்களின் நல்வாழ்வு மீது கவலைகொண்ட அரசாங்கமாக இருக்குமேயானால், களவு செய்ததற்கப்பால் தண்டிப்பதைக் கைவிட்டு, நாட்டிலே ஏற்பட்ட வறுமையை ஒழிக்கவேண்டும். வேலை இல்லாதோருக்கு வேலைத் தேடிக் கொடுக்க வழி செய்ய வேண்டும். சுரண்டும் வர்க்கம் ஒழிக்கப்படவேண்டும். கல்வியைப் பரப்ப வேண்டும். இவை போன்ற பிறபல காரியங்களைச் சய்து, சமதர்ம நாடாக்க வேண்டுமே தவிர, இதைக் கைவிட்டு, குற்றம் செய்ய வழியும் வகுத்துவிட்டு தண்டனையும் கொடுத்துவிட்டால் மட்டும் நாட்டில் குற்றம் புரிவோரை திருத்தி விடுவதாகாது என்பதை ஆளும் வர்க்கம் உணரவேண்டும்.

சரி, இதுதான் போகட்டும். மத அடிப்படையிலே, மதப்பித்துப் பிடித்தவர்களாலும், சீமான்களாலும் ஆட்சி ஆளப்படுகிறது. அதனால் அவர்களுக்கு இதிலே நாட்டம் செல்லவில்லை என்றால், கைதிகளாக இன்று சிறையில் வாடுவோர் என்ன காரணங்கொண்டு கைதிகளானார்களோ, அந்தத் தன்மையை மாற்றுவதற்குண்டான பயிற்சியாவது சிறையில் கொடுக்கிறார்களா என்றால் அதுவுமில்லை.

ஏதோ கூறுகிறார்கள் கைதிகளுக்கு சிறையில் வேலை கொடுக்கப்படுகிறது என்று. அவ்விதம் பிரமாதமான வேலைகளோ, அறிவு பரப்பும் வேலைகளோ, அங்கு ஒன்றும் கிடையாது. பாய்முடைதல், நெசவு, அச்சகம், காவல் காப்பது, சமையல்

செய்வது போன்ற தொழில்களே கைதிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இத்தொழில்களினால் கைதிகளின் பாழ்ப்பட்ட மனோநிலை மாறிவிடுமா? என்பதை ஆளும் வர்க்கம் உணரவேண்டும்.

குற்றம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும் தடையை நீக்காது குற்றம் செய்ததற்கு அப்பால் தண்டனை கொடுத்து 21-ஆயிரம் பேர்களைச் சிறையில் பூட்டி வைத்திருப்பது நாட்டிற்கு எவ்வளவு பெரிய நஷ்டம்? நஷ்டம் மட்டுமல்ல மானக்கேடும் அல்லவா? இந்த 21-ஆயிரம் பேர்களை நம்பி வாழும் குடும்பங்களில் உள்ளவர்களின் கணக்கை எடுத்துப் பார்த்தால் குறைந்த அளவு 50-ஆயிரமாவது இருக்குமே! இது எவ்வளவு பெரிய பரிதாபகரமான செயல் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்று சிறையில் அடைபட்டுக் கிடப்போருக்கு, அவர்கள் எக்காரணம் கொண்டு சிறைச்சாலையை நோக்கி விரைந்து வந்தார்களோ அந்த நிலையை மாற்றுவதற்குரிய கல்வி புகட்ட வேண்டும். சாதி வேறுபாடு மத வேறுபாடு போன்ற பித்தத்தைத் தெளிய வைக்கக்கூடிய மனிதத் தன்மையைப் போதிக்க வேண்டும். உலகானுபவங்களை அறிந்து கொள்ளப் பத்திரிக்கைகள் கொடுக்க வேண்டும். பொதுப்படையாக இன்று அரசியலின் காரணமாகச் சிறை சென்று, அதிலும் முதல் வகுப்புக் கைதிகளாகச் செல்வோருக்கே ஒரு பத்திரிகை மட்டும் (அதுவும் காங்கிரஸ் பத்திரிக்கை மட்டும்) கொடுக்கப்படுகிறது. மற்றவர்களுக்குச் சிறையில் அ.ஆ. என்ற எழுத்து வாசனையையே அறிய முடியாது. இந்த நிலையில் கைதிகள் நடத்தப்படுவதால் சீர்திருத்துவது எங்கே?

அதுமட்டுமல்ல, இன்று சிறையில் கிடக்கும் கைதிகளுக்குப் போர்ப்பயிற்சி கொடுத்தால் வட இந்த நாட்டைப் பாதுகாப்பதற்கு அவர்களே போதுமே. இப்பேர்ப்பட்ட வீரத் தன்மையுடைய வாலிபர்களை வீணாகப் பாழ்படுத்திவிடக் கூடாது என்பதே என் ஆசை. இந்த முறைகளைக் கைவிட்டு, கைதிகளை மூத்திரச் சட்டியைத் தூக்க வைப்பதாலோ, கடுங்காவல் தண்டனை கொடுப்பதாலோ, சோளக்கஞ்சியை ஊற்றுவதாலோ, 5 கம்பிகளுக்குள்ளே தள்ளிப்பூட்டி விடுவதாலோ, மக்கள் வெருண்டு சீர்திருந்திவிடுவார்கள் என்று எண்ணுவது அறிவுடமையாகாது. ஏனெனில் பொதுப்படையாக நாட்டோர் அனைவருக்கும், குற்றம் செய்யப்பட்டவர்களுக்கு அரசாங்கம்

என்ன தண்டனை கொடுக்கும். சிறையில் என்ன முறையில் நடத்தப்படும் என்பது நன்கு தெரியும். தெரிந்தே குற்றம் செய்து, உற்றார் உறவினர் அனைவரையும் துறந்து, சுகபோகங்களை இழந்து, சிறை செல்லத் துணிந்து விடும் மக்கள் அரசாங்கம் கொடுக்கும் கடுங்காவல் தண்டனையைக் கண்டா வெருண்டு விடுவார்கள்! ஆம்! என்றால் வெள்ளைக்காரன் இந்நாட்டிற்கு வந்த அன்று சிறைப்பட்டோரின் எண்ணிக்கையின் அளவு இன்று சுதந்திர ஆட்சியில் கைதிகளின் எண்ணிக்கை குறைந்திருக்க வேண்டும்? குறைந்திருக்கிறதா? இல்லையே! நாட்டிலே உள்ள வீட்டுப் பஞ்சத்தைப்போக்க, வீடுகட்டுவதைக் கைவிட்டு, சிறைச் சாலைகளில் உள்ள அறைகளை அல்லவா பன்மடங்கு பெருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே இன்றுள்ள முறைகளை மாற்றி சிறையைப் பாசறையாக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.*

* குடிஅரசு, 20.11.1948, பக். 5, 6.

காந்தியாரைக் கொன்றது கோட்ஸேயல்ல, கடவுள்!

உத்தமர் காந்தியார் உயிர் துறந்தார். இல்லை! சுட்டுக் கொல்லப்பட்டார். அதுவும் ஒரு குண்டினால் அல்ல, மூன்று குண்டுகளால். தன்னுடைய கருத்துக்கு மாற்றுக் கருத்துடையோராலா? இல்லை! தான் எந்த இந்து மதத்தை உலகத்திலேயே பரப்ப வேண்டும் என்ற எண்ணத்துடன் நாட்டில் உலாவி போற்றிப் புகழ்ந்து, வழிபட்டு வந்தாரோ, அதே இந்து மதத்தைச் சேர்ந்தவனால், எந்த ராமராஜ்யத்தை நிலை நிறுத்தவேண்டும் என்ற மனப்பான்மையுடன் அல்லும் பகலும் அயராது ராமபஜனை பாடி வந்தாரோ, அதே ராமனுடைய பரம் பரையில் வந்த கோட்சே என்ற மராட்டியப் பார்ப்பனனால் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்தோ பரிதாபம்!

உத்தமர் காந்தி அடிகளைக் கொன்ற கோட்சே மராட்டியப் பார்ப்பனன் என்பது பலருக்குத் தெரியாது என எண்ணுகிறேன். ஏனெனில் அந்த அளவுக்கு அம்பலப்படுத்தக்கூடிய பத்திரிக்கைகளெல்லாம் பார்ப்பனன் என்ற பதத்தை அப்படியே இருட்டடிப்புச் செய்து விட்டது. (திராவிடர் கழகப் பத்திரிக்கைகளைத் தவிர) **பத்திரிக்கைகள் நினைத்தால் தாம் எ்ண்ணியவாறெல்லாம் செய்ய முடியுமே!** இல்லாவிட்டால் கட்டுப்பாடாகப் பார்ப்பனப் பத்திரிக்கைகளெல்லாம் உத்தமரைக் கொன்றவன் படுபாவி பார்ப்பனன் தான் என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்தாமல் இருந்திருக்க முடியுமா? இறைவன் திரு அடிகளுக்கு மக்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் அந்தஸ்து தங்களுக்கு இருக்கிறது. தங்களால் தான் முடியும் என மக்களை முட்டாள்களாக்கி வைத்திருக்கிற பார்ப்பனீயத்திற்கு இருட்டடிப்பு வேலையா? பிரமாதம். உத்தமர் காந்தியார் பார்ப்பனனால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதை மறைத்தது மட்டுமல்ல, உத்தமரைக் கொன்ற மதவெறியன் கோட்சையைக் கடவுளாக்கினாலும் ஆக்கிவிடுவர். அதே போல் பேசவும் ஆரம்பித்து விட்டார்கள். **அதற்குத் தகுந்த வசதிகளும் அவர்களிடம் இருக்கின்றன. அரசு அவர்களிடம் பத்திரிக்கை பலம் அவர்களிடம் மற்றும், செய்தி, ஒலிபரப்பி நிலையம் அவர்களிடம்,**

கின்னரர்கள், கிம்புருடர்கள் அவர்களிடம்; நாயன்மார்கள், ஆள்வாராதிகள் அவர்களிடம்; அடியார்கள் அவர்களிடம். நாற்பத் தெண்ணாயுரம் ரிஷிகள், முப்பத்தி முக்கோடி தேவர்கள் அவர்களிடம், ஏன்? அதிகம் கூறுவானேன், கடவுள்கூட அவர்கள் பக்கம் இருக்கிறார். இவ்வளவு பலத்தை வைத்துக் கொண்டு கோட்சையை ஏன்? கடவுளாக்க மாட்டார்கள்.

“ஏ! பக்தா! எழுந்திரு. கொறட்டை விட்டா தூங்கிக் கொண்டிருக்கிறாய்? உணர்ச்சி அற்றவனே எழுந்திரு! காந்தியாரைக் கொன்றவன் இந்து மதத்தவன், ஓர் மதவெறியன். மராட்டிய பார்ப்பனன் என்றெல்லாம் திராவிடர் கழகத்தவர்கள் பேசியும் எழுதியும் வருவது உனக்குத் தெரியாதா? எனது அசல் படைப்பில் ஜனித்த பிராமணோத்தமர்களாகிய உங்களை கேவலம் இந்த சூத்திரப் பயல்கள் திட்டுவது தகுமா? கொலைகாரனாக்கியது முறையா? அப்பப்பா என்னால் பொறுக்க முடியவில்லையே! மகனே! இதோ வரம். காந்தியாரைக் கொன்றது பார்ப்பனனுமல்ல, கோட்ஸேயுமல்ல. பார்ப்பனர்களே மேல் சாதியாக இருப்பதால் அச்சாதிப் பார்ப்பனப் பெண்ணின் வயிற்றில் பிறந்து, வளர்ந்து, கோட்சேயாக நானே (கடவுள்) நாட்டில் உலாவினேன். காந்தியாருக்கு முடிவு காலம் நெருங்கியது. கொன்றேன். கொன்றது சரியா? பிரபோ! என்று கேட்டு விடாதே, எனது பக்தன் காந்தியை உலகம் புகழவேண்டும். அவர் மகிமையை மக்கள் உணரவேண்டும் என்பதற்காவே சுட்டுக் கொன்றேன். என் பக்தனை என் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்று விட்டேன். இங்கு (மேல் உலகத்தில்) உன்னத பதவியில்தான் இருக்கிறார் காந்தியார். எனவே அவரைப்பற்றி எவரும் கவலைப்பட வேண்டாம். கோட்சேயை நொந்து கொள்ளவும் வேண்டாம். நானே கடவுள் - கோட்சே”

இவ்விதமாக இன்று இரவு என் கனவில் கடவுள் என்னிடம் கூறி மறைந்து விட்டார் என பட்டேல் ஒரு கூட்டத்தில் பேசிவிட்டால் போதும், உடனே (திராவிடர் கழகப் பத்திரிகைகளைத் தவிர) பத்திரிகைகளல்லாம் தனிச் சிறப்புடன் கொட்டை எழுத்துகளில் பத்திரிகை முழுவதும் பிரசுரித்துவிடும். மக்களும் அப்படியா? என்ன ஆச்சரியம்! என மதிமயங்கிவிடுவர். மறுநாள் காலை இந்து பத்திரிகை தலையங்கம் தீட்டிவிடும். பொதுமக்களே! சென்னை மைலாப்பூர் கபாலீசுவரர் கோவில் பக்கத்தில் ஓர் கோவில் கட்டி, லட்ச ரூபாய் செலவில் கோட்சேயின்

சிலைசெய்து, அக்கோவிலில் குடியிருக்கச் செய்ய வேண்டும். அதற்குப் பத்து லட்சம் ரூபாய்கள் தேவைப்படலாம். முதன் முதலாக இசைவாணி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் கச்சேரி செய்து நிதி திரட்டித் தருவதாக வாக்களித்துள்ளார்கள். தமிழ் மக்களே! மறந்து விடாதீர்கள். கொஞ்சம் கச்சம் கட்டி நிதி திரட்ட முயலுங்கள் என எழுதிவிடும். அதன் மறுநாள் முதன் மந்திரி ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தலைமையில் கோட்சே நிதிக்கமிட்டி ஆரம்பிக்கப்படும். கேட்கவா வேண்டும். பணம் குவிய கோட்சே சிலை செய்து கோபுரத்திலும் குடியிருக்கச் செய்து விடுவார்கள். திறப்பு விழாவிற்குத்தான் இருக்கவே இருக்கிறார் ராஜ கோபாலாச்சாரியார். கச்சேரிக்கு எம்.எஸ். இருக்கிறார். கவிகள் புனைய இராமலிங்கங்கள் இருக்கிறார்கள். காலில் விழுந்து கும்பிட டி.கே.சிகள் இருக்கிறார்கள். விழாவும் கனஜோராரக முடியும்.

இப்படியும் செய்வார்களா? மக்கள் தான் நம்புவார்களா? என அவசரத்தில் கூறி விடாதீர்கள். உத்தமர் காந்தியார் உடல் எரிக்கப்பட்டு வீழ்ந்த சாம்பலை எடுத்துக் கடலிலே கரைக்க ஒரு வெள்ளைக்காரக் கவர்னர் ஒரு ஆகாய விமானத்தை எடுத்துக்கொண்டு சாம்பலை எடுக்க டில்லிக்கு ஓடியது இந்த இருபதாம் நூற்றாண்டு தானே. வெள்ளைக்காரனை மடையன் என்கிறீர்களா? இல்லை, அவருக்குத் தெரியும் மடைமை என்று. ஆனால் மக்களுக்கு ஏற்ற முறையில் தானே அவரால் நடிக்க முடியும். அப்படி நடித்தால் தானே உங்கள் அன்பிற்கு பாத்திரமானவராவார்.

இப்பேர்ப்பட்ட மனதை உடைய மக்களைக் கொண்ட நாட்டில் எதுதான் செய்யாமல் இருக்கும் பார்ப்பனீயம். இதற்கு முன்பும் பல அநீதிகளைச் செய்து விட்டு ஆண்டவன் மீது பழிகளைச் சுமத்தி விட்டே இன்று வரையிலும் உல்லாசமாக உயிர் வாழ்ந்து வருகிறது பார்ப்பனீயம்.

நந்தனாரைத் தூக்கி நெருப்பில் எறிந்து விட்டு ஜோதியோடு ஜோதியாக ஆண்டவனிடம் சென்று விட்டதாகக் கூறி விட்டார்கள். ராமலிங்க சுவாமிகளை அடித்துக் கொன்றுவிட்டு கடவுள் ஏற்றுக்கொண்டார் எனக்கூறி விட்டார்கள். மதுரை திருமால் நாயக்கரை சுரங்கத்திற்குள் அழைத்துச் சென்று அடித்துக்கொன்று விட்டு, சுரங்கத்தின் வழியே கடவுளிடம்

சென்று விட்டதாக மக்களிடம் கூறியே மாற்றியது, உத்தமர் காந்தியாரைக் கொன்ற கோட்சேயின் பரம்பரையான பார்ப்பனர்கள் தான்! இது மட்டுமல்ல. மணிமுடி தரித்த மன்னர்களை ஆண்டவன் பெயரைச் சொல்லி வீழ்த்தியிருக்கிறார்கள். பல பல சாம்ராஜ்ஜியங்களை கவிழ்த்தியிருக்கிறார்கள். ஏன் அதிகம் கூறுவானேன் இந்த நாட்டை ஆங்கிலேயனுக்கு காட்டிக் கொடுத்ததே இந்தப் பார்ப்பனர்கள்தான். இவ்வாறெல்லாம் செய்த பார்ப்பனீயம் படுபாவி கோட்சேயை அதுவும் பார்ப்பனக் கோட்சேயை ஏன் கடவுளாக்காது? இதற்குள் இக்காரியத்தில் ஈடுபட்டிருப்பார்கள். ஆனால் பெரியாரின் பெரும்பாணம் பாயுமே! அண்டசராசரங்களை கிளறுமே! என எண்ணி தயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். பார்ப்பனர்கள். எவ்விதம் பசப்பினாலும் பார்ப்பனியத்திற்கு சாவுமணி அடிக்கும்நாள் நெருங்கிக் கொண்டே தான் வருகிறது! வந்தே தீரும்!*

* குடிஅரசு, 06.08.1948, பக். 6, 12.

படை புறப்பட்டு விட்டது!

[25-12-1968 குடியரசு இதழில் - படை புறப்பட்டுவிட்டது - என்ற கட்டுரை 'வாலி' என்ற பெயரில் எழுதப்பட்டுள்ளது.]

படை புறப்பட்டு விட்டது. சுமார் ஆயிரம் பேர்களைக் கொண்டபடை புறப்பட்டு விட்டது! சேலத்திலிருந்து புறப்பட்டு, சென்னை செயின்ட் ஜார்ஜ்கோட்டையை நோக்கிச் செல்லுகிறது! ஜார்ஜ் கோட்டையை முற்றுகையிட்டு விட்டபிறகு எங்கு, எத்திசையை நோக்கிச் செல்லுமோ நான் அறியேன். ஆனால் ஒன்று மட்டும் உறுதி கூறி விடுகிறேன். அதாவது, பாய்ந்து செல்லும் படையைக் கண்டு கோழை உள்ளம் படைத்தவர்கள் பதுங்குவதற்கு மூலை முடுக்குகளைத் தேடி ஓடவோ, வீர உள்ளம்படைத்தவர்கள் படையை எதிர்கொண்டு தாக்கி புறமுதுகாட்டி ஓடச்செய்ய ஆயத்தமாகவோ வேண்டாம். ஏனெனில் நான் குறிப்பிடும் படை நாகரீக இவ்விருபதாம் நூற்றாண்டிற்கு ஏற்ற வண்ணம் ஆயுத தளவாடங்களோடோ, அல்லது ஆயுதப் பயிற்சி பெற்றவர்களாகவோ, படையில் செல்ல வில்லை. ஆனாலும் அது விஷயத்தில் கொஞ்சம் சர்வ ஜாக்கிரதையாகவே இருங்கள். என்னப்பா பயப்படவேண்டாம் என ஆறுதல் கூறிவிட்டு, ஆனால்... என்ற பீடிகையைப் போட்டு திணறச் செய்கிறாயே! என என்னைச் சாடுகிறீர்களல்லவா? சரி படியுங்கள் விஷயம் புலப்படும்.

படைவீரர்கள் சேலத்துப் பார்ப்பனர்கள் என்ன? படைவீரர்கள் பார்ப்பனர்கள் என்றதும் சிரிக்கவா செய்கிறீர்கள்? பந்திக்கு முந்து; படைக்குப் பிந்து என்று கூறும் தர்ப்பா சூரர்களைப் படை வீரர்கள் என்று சொன்னதற்காகவா இச்சிரிப்பு? அதை அறிந்துதானே முதலிலேயே யாரும் பயப்பட வேண்டாம் என எச்சரிக்கை செய்தேன். என்ன இருந்தாலும் ஒரு ஆயிரம் பேர்கள் வரையிலும் சேர்ந்து விட்டால் படை என்று சொன்னால் தவறாகாது பாருங்கள். அதனால் தான் அவ்விதம் கூறினேன். வேண்டுமேயானால் நீங்கள் பஞ்சாங்கப்படை என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன். உங்களை யார் கேட்கப்போவது?

சுமார் ஆயிரம் கையொப்பம் அடங்கிய மகஜர் ஒன்று தயார் செய்து 5, 6 பார்ப்பனர்களும், ஒன்று இரண்டு (நம் இனத்தவர்) அவர்தம் எடுபிடி ஆட்களும் ஓமந்தூராரிடம் கொண்டு போகிறார்களாம். அதாவது திராவிடர் கழகம் வகுப்புவாதத்தைக் கிளறி விட்டுப் பார்ப்பனர்கள் மீது பிற மக்களை உசுப்பி விடுகிறதாம். அதனால் பார்ப்பனர்களுக்கு ஆபத்தாகி விட்டதாம்! இந்த ஆபத்திலிருந்து தப்ப, திராவிடர் கழகத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமாம். இது அந்த மகஜரின் தாத்பர்யம்.

பூ இவ்வளவுதானா? இதற்காகத் தானா படை புறப்பட்டு விட்டது? ஓமந்தூராரை நோக்கிச் சாடி விட்டது என்றவுடன் என்னமோ, ஏதோ ஓமந்தூராருக்கு என்ன ஆபத்தோ என்றல்லவா எண்ணி விட்டோம். கேவலம் இந்த மகஜருக்கா ஓமந்தூரார் பயப்படுவார்? விடாக்கண்டன் ராசகோபாலாச்சாரியார் அவர்களையே விரட்டி அடித்த காமராசுவின் பாய்ச்சலுக்குப் பதுங்காத ஓமந்தூராரா இந்த மகஜருக்கு அஞ்சுபவர்? என நீங்கள் நினைக்கலாம். நீங்கள் நினைக்கிறபடி* .... காமராசைக் கண்டு ஓமந்தூரார் பயப்படாமல் இருக்கலாம். ஆனால் பார்ப்பனர்கள் விஷயத்தில் அப்படி அல்லவே ஓமந்தூரார் அமெரிக்கா தேசத்து அணுக்குண்டைவிட அபாயம் உடையவர்கள் பார்ப்பனர்கள் என்பதாக அல்லவா கருதுகிறார். அப்படி இல்லாது போனால் ஒரு 'இந்து' ஒரு 'சுதேசமித்திரன்' பத்திரிகைகள் கடைசிப் பக்கத்தில், கடைசி பத்தியில் கடைசி வரியில் கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு, ஓமந்தூராரைத் தங்கள் அலுவலகத்தில் வந்து காணும்படி (இது போன்ற கட்டளை) எழுதினால் ஓடோடிப் போவாரா? ஓமந்தூரார் இவ்விதம் பார்ப்பனர்களைக் கண்டு நடுங்கையில் 1000 கையொப்பம் கொண்ட மகஜர் என்றால் ஓமந்தூரார் கவனிக்காமலோ, கவலைப்படாமலோ எப்படி இருக்க முடியும்? எனவே பார்ப்பனர்கள் சொல்லியபடி ஓமந்தூரார் திராவிடர் கழகத்தை ஒழித்துக்கட்டாவிட்டாலும் (முடியா விட்டாலும்) அந்த அளவுக்குப் பார்ப்பனர்கள் மனங்குளிர்ச்சி அடையும் வண்ணம் ஏதாவது ஒன்றைச் செய்தே தீருவார்.

ஆனால் அதைப்பற்றி நாம் கவலைப் படத்தேவையில்லை. ஓமந்தூரார் எந்த அடக்குமுறையைத் திராவிடர் கழகத்தின் மீது

* குடிஅரசு இதழ் சிதிலமடைந்துள்ளது.

வீசினாலும் திராவிடக்கழகக் கொள்கை அழிந்துவிடாது. அதற்குப்பதில் வளர்ச்சியையே தரும். ஏட்டைப் புரட்டிப் பாருங்களேன். உண்மையா? பொய் என்று.

கருப்புச்சட்டைப்படையைச் சட்ட விரோதமாக்கினார் ஓமந்தூரார் என்ன கண்டார்? எங்கும் கருப்பு மயத்தைக் கண்டார். விடுதலைக்கு 2000 ஜாமீன் கேட்டார். அதன்படியே 2000 த்தையும் பெற்றுக்கொண்டு பொது மக்களிடம் 15000 ரூபாய் வாங்கித் தந்தார். ஒரு போர்வாள் நாடகத்திற்குத் தடை விதித்தார். அதற்குப் பல போர்வாள்களை உற்பத்தி செய்தார். இராவண காவியத்தை, விற்கலாகாது எனத் தடை விதித்தார். சில கடைகளில் வாங்குவாரற்றுத் தேங்கிக் கிடந்த இராவண காவியத்தை ஒன்றுகூட விலைக்கு அகப்படாதவாறு, விற்பனை செய்து நாட்டிலே பரப்பினர். இதுபோலத்தான் மற்றவைகளும், எனவேதான் அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று கூறினேன்.

ஆனால்! கனம் ஓமந்தூரார் அவர்களுக்கு நான் கூறுவது ஒன்றே ஒன்று தான். திராவிடர் கழகம், உலகமே ஒப்புக்கொள்ளக்கூடிய, ஆண், பெண் ஆகிய இரு சாதிகளைத் தவிர வேறு சாதிகள் கூடாது என்றுதான் கூறி வருகிறது என்பதை உங்களோடு நாட்டோரும் நன்கு அறிவர். ஆனால் திடீரென பார்ப்பனர்கள் இப்போது திராவிடர் கழகத்தின் மீது மோதுவதின் காரணம், அரசாங்க அலுவல்களில் இருக்கும் பார்ப்பனர்களின் எண்ணிக்கையை எடுத்து, இதை மக்களிடம் காட்டி பார்ப்பனர்களின் ஏகபோக உரிமையை "விடுதலை" எடுத்துக் காட்டுவதால் தான் என்கின்றனர். இப்பணியை, "விடுதலை" ஆதி முதல் செய்து வருகிறதே ஒழிய, ஓமந்தூரார் ஆட்சியில் மட்டுமல்ல, இதை ஓமந்தூரார் உணர்ந்து தெளிந்துகொள்ள ஒரு ஆதாரத்தைத் தருகிறேன். இதைப் பார்ப்பனர்களிடம் காட்டி, பார்ப்பனோத்தமர்களே! நான் ஆட்சியில் இருப்பதால் தான் "விடுதலை" புள்ளி விபரங்களை வெளியிடும் பணியில் தைரியமாக இறங்கி இருக்கிறது என்று எண்ணாதீர்கள். அது அதன் பரம்பரைக் கொள்கை. வேண்டுமானால் இதோ பாருங்கள் 8-ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்ட விபரத்தை, அதாவது 3-4-1940 புதன்கிழமை மலர் 5, இதழ் 184, முதல் பக்கத்தில் இப்படி வெளியிட்டிருக்கிறது.

சென்னை ஹைக்கோர்ட் உத்தியோகங்கள், பிரதம நீதிபதி கவனிப்பாரா?

சென்னை ஹைக்கோட்டில் கீழ்க்கண்ட உத்தியோகங்களெல்லாம் பார்ப்பனர்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறன.

1. ரிஜிஸ்டரார்- டி. சுப்பராவ்
2. மாஸ்டர்- ஆர். சத்தியமூர்த்தி
3. டிபுடி ரிஜிஸ்டிரார்- பிசி. சங்கரநாராயணா.
4. முதல் உதவி ரிஜிஸ்டிரர்- ஆர் .ஜெயராம் அய்யர்.
5. உதவி ரிஜிஸ்டிரார் (அப்பீல் தரப்பு)-எஸ். சீனிவாச அய்யர்.
6. அட்மினிஸ்டிரேட்டர் ஜனரல் - எஸ். ரங்கசாமி அய்யங்கார்.
7. பிரதம லா, ரிப்போட்டர்- ஆர். என். அய்யங்கார்.
8. கிரெளன் பிராசிக்யூடர்- டிஎஸ்.வெங்கட்ராமன்.
9. உதவி லா, ரிப்போட்டர்கள்- ஜி.ராசகோபால், என்.சீனிவாச அய்யங்கார்.

பார்த்தீர்களா? பார்ப்பனோத்தமர்களே! நீங்களும் அன்றிலிருந்து இன்று வரையிலும், பதவியை விட்டபாடில்லை. "விடுதலை"யும் தன் வேலையை விட்டபாடில்லை. இருவருக்கும் பொதுவில் நான் என்ன செய்வது என மகஜர் கொண்டு வந்தவர்களிடம் கூறுங்கள். தைரியமிருந்தால் பார்ப்பனர்கள் தானே வகுப்புவாதிகள் என்கிற உண்மையை விளக்குங்கள். இல்லை உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்.*

* குடிஅரசு, 26.12.1948, பக். 7, 11.

பதுமையின் பிதற்றல்!

அயோத்தி ராமனை, கனவில் நினைத்து தென் இலங்கை வேந்தன் இராவணன் அலறித் துடிப்பானென்று இதிகாசம் கூறுகிறது. இதை உண்மை என்று என்னால் நம்பமுடியாது. ஏனெனில் அந்த அளவுக்கு இராமனிடம் உயர்ந்த பண்போ வீரமோ, ஒன்றும் இருந்ததாக அதே இதிகாசத்தில் கூடக் கிடையாது. அவ்விதம் இருக்கையில் வீரத்தால், குணத்தால் வல்லவனான இராவணன் அலறித் துடித்தானென்று கூறுவது, கட்டுக்கதை. வஞ்சனையின் சூழ்ச்சி, ஆனால்! அதே இராவணனின் பரம்பரையான ஈரோட்டுப் பெரியார் ராமசாமியைக் கண்டு, அயோத்திராமனின் பரம்பரையான (பார்ப்பனர்கள்) அக்கிரகாரவாசிகள், கனவிலும், நினைவிலும் அலறித் துடிதுடிப்பதை இன்று நேரில் கண்டு வருகிறோம். ஏனெனில் அவர்களின் சோம்பேறி உல்லாச வாழ்விற்கு கொலைக் களம் ஏற்பட்டுவிட்ட காரணத்தால், இது இயல்பு. ஆச்சரியமில்லை. ஆனால் அதே பெரியாரின் பரம்பரையினரே பெரியாரைக் கண்டு அலறினால் அப்பேர்வழிகளைக் கண்டு ஆச்சரியப்படுவீர்களா? என்னைப் பொருத்தவரையில் ஆச்சரியப்படத்தேவையில்லை என்றே கூறுவேன். ஏனெனில் **சுயநலத்தை எவன் எவன் கருதிவிட்டானோ, அவனெல்லாம், சந்தர்ப்பத்திற்கேற்றாப்போல அடங்குவதும், ஒடுங்குவதும், அலறுவதும் மனித இயல்பாகப் போய்விட்டது.** இப்பேர்ப்பட்ட பேர்வழியைத்தான் உங்களிடம் படம் பிடித்துக் காட்டப்போகிறேன்.

அன்று "தினமணி" சொக்கலிங்கம், இன்று "தினசரி" சொக்கலிங்கம் " காண்டீபம்" என்ற வார இதழ் ரூபத்தில் வந்து, பெரியாரை நினைத்து நினைத்து, அலறுகிறார், ஒடுகிறார், துடிதுடியாய்த் துடிக்கிறார். மோதுகிறார் கன்னாபின்னா என்று வாயில் வந்தபடியெல்லாம் உளறி கொட்டுகிறார். பேனா சென்றபடியெல்லாம் எழுதிக் கிறுக்கித் தள்ளுகிறார். கோவணத்தைக் கிழித்துத் தோளில் போட்டுச் செல்லும் பைத்தியக்காரனைப்போல. பொது மேடையில் நின்று பேசுபவன் பேச்சாளி, எழுதுபவனெல்லாம் எழுத்தாளி, பத்திரிகை ஆசிரியர், என்று நினைக்கும் அளவுக்கு மக்களின் மனப்பண்பு இருக்கிற

வெளியூர்களில் சண்ட மாருதப் பிரச்சாரம் செய்து வரும் கருப்புச் சட்டைத் தோழர்கள், இன்சினியர்கள் வேலை பார்த்து வர ஆசைப்படுகிறார்களாம். அதாவது எங்கெங்கு ஒட்டைகள் இருக்கின்றன எங்கெங்கு ஒழுகல் இருக்கிறது என்பதை எல்லாம் கண்டுபிடித்து அவ்வளவையும், காங்கிரஸ் மீதும், காங்கிரஸ் தலைவர்கள் மீதும் மண்வீசும் திருப்பணிக்கு உபயோகப்படுத்திக் கொள்ளுகிறது என்பது திட்டமாம். இது பதுமையின் முதல் குற்றச்சாட்டு.

ஏ! பதுமையே! உன் தனிப்பட்ட முறையில் உன் வீட்டிலுள்ள பானை, சட்டிகள் ஒட்டை விழுந்தால் அதைப்பற்றின கவலை எங்களுக்கில்லை. (நீ விரும்பாததால்) **ஆனால் ஒரு நாட்டையே பாதிக்கக்கூடிய அளவுக்கு நிர்வாகத்தில் ஒட்டை விழுந்துவிட்டால்! உன்னைப் போன்ற உயிரற்ற பிண்டங்கள் வாளா இருந்தாலும் நாட்டு மக்களின் மீது அக்கரை கொண்ட எங்களால் எப்படி பேசாதிருக்க முடியும்?** இந்நாட்டின் நிர்வாகத்தின் ஒழுகல் பொறுப்பை அடைக்கும் திருப்பணி காங்கிரஸ் நண்பர்களிடம் இருப்பதால்தான் காங்கிரஸ் தலைவர்கள் மீது அறிவு என்கிற மண்ணை எறிந்து நிர்வாகத்திலே இருக்கும் அறியாமை என்ற ஒழுகலை அடையுங்கள் என்கிறோம். இதில் என்ன தவறுதலைக் கண்டுவிட்டாய்?

பின்னும் கூறுகிறது வெள்ளைக்காரனிடத்தில் ஒசிக்கோட்டு வாங்கிப் போட்டுக் கொண்டு சிந்து பாடினோமாம். மடப் பதுமையே இதற்கு நான் பதில் சொல்வதைவிட அன்று எங்களிடம் இருந்து இன்று உங்களோடு உங்களால் மந்திரிப் பதவி, அங்கத்தினர் பதவி கொடுத்துப் போற்றிப் புகழ்ந்து வரும் டாக்டர் சுப்பராயன், மாஜி குமாரராசா முத்தையா செட்டியார் போன்றவர்களைக் கேள்! அவர்கள் கூறுவார்கள் அதற்கு சரியான பதில்.

வெள்ளைக்காரன் பூட்ஸ் மினுமினுப்புக் குறையக்கூடாது என்று குனிந்து, குனிந்து, பாலீஸ் போட்ட கூட்டம் என்று கூறுகிறது. பாலீஸ் போட்ட பழக்கத்தில் அட, அறிவுகெட்ட பதுமையே! குனிந்து கொடுக்கும் குணமுடையோன், நீங்களா நாங்களா? நன்றாக யோசித்துப்பார். வெள்ளைக்காரர்கள் குரோட்டன்ஸ் செடிகள் என்று சொன்ன கனம் ராசகோபால் ஆச்சாரியார் யார்? உன்னுடைய இந்துஸ்தானின் முதல் கவர்னர்

ஜெனரல் வேவல் யார்? தற்சமயம் லண்டன் சென்ற முதல் மந்திரி நேரு. அங்கு எத்தனையோ இந்தியர்கள் இருக்க, வேவல்துரை இல்லத்தில் தங்கினாரே, அந்த வேவல் யார்? தோழியர்கள் விசயலட்சுமி பண்டிட், சரோசனி அம்மையார் மற்றும் உங்களைச் சேர்ந்த பெண்மணிகள் தங்கும் இடத்தையெல்லாம் சொல்லட்டுமா? இது ஏன்? இப்பொழுது சொல்! யார் பாலீஸ் போட்டகூட்டம், பாலீஸ் போடக்காத்துக் கொண்டிருக்கிற கூட்டம்?

சென்ற இந்தி எதிர்ப்பின்போது, சோழவந்தானில் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்று நடந்ததாம். அதில் ஒரு மந்திரியார் பேசும்போது, ஒலிபெருக்கி கருவி, என்பதற்குப் பதிலாக ஒலிபெருக்கிக் குருவி என்றாராம். அவர் கருவியை குருவி என்று சொன்னது மெய்யோ பொய்யோ நான் அறியேன். அந்த வாசகத்தை வைத்துக் கொண்டு கிண்டல் செய்கிறது காண்டீபம். கருவியைக் குருவி என்று சொன்னார் என்பதை உண்மை என்றே வைத்துக் கொள்வோம். இந்த நிலையில் ஒரு மந்திரியாரே இருந்தால் மக்களைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை. உனக்கு உன் இனமக்களின் மீது சிறிதளவேனும் அக்கரை இருக்குமேயானால், நீயும் அறிவுடையவனாக இருப்பாயானால் அதைக்கண்டு நீ வெட்கப்படவேண்டாமா? அந்த நிலையை மாற்ற முயற்சிக்க வேண்டாமா? அதுதானே அறிவுடைமை! ரோட்டில் ஒரு பைத்தியக்காரன் சென்றால் அவன் நிலையைக் கண்டு பரிதாபப்பட்டு பயித்தியத்தை மாற்ற முயற்சி எடுக்காது, அவன் மீது கல்லெறிந்தால், அவனைவிட கல் எறிபவனல்லவா பெரிய பையித்தியக்காரன். அதைப் போலல்லவா உன் செய்கையும் இருக்கிறது.

ஏ! செத்தபதுமையே! நீயே சொல்லுகிறாய் கருவியைக் குருவி என்று சொன்னார் என்று. இதை நீ சொன்னால் என்ன, நாங்கள் சொன்னால் என்ன? தமிழ்க் கொலை கொலைதானே! இதை உன்னால் மறுக்க முடியுமா? நாங்கள் தமிழில் மேதாவிகள், நீங்கள் தான் தமிழ்க்கொலை செய்கிறவர்கள் என்று கிண்டல் செய்து விட்டால் அக்குறை நீங்கிவிடுமா? ஆட்சி பீடத்தில் இருக்கக்கூடியவர்கள் இப்பேர்ப்பட்ட தமிழ்க்கொலையைத் தடுக்க முயற்சி எடுக்க வேண்டாமா? இதைக்கேட்டால் எங்கள் மீது சீறி விழுகிறாயே! நாங்கள் என்ன இந்த நாட்டின் பிரஜைகள் இல்லையா? அறிவு கெட்டப்பதுமையே! இதற்கு என்ன

சொல்லுகிறாய்? நீ எங்கே பதில் சொல்லப்போகிறாய்? அவ்வளவு சொரணை உள்ளவனா நீ? சொரணை இருந்தால் இதற்குள் நீ ஈராட்டிற்கு வந்திருப்பாயே!

மேலும் பதுமை கேட்கிறது ஜஸ்டிஸ் மந்திரிகள் காலத்தில் தமிழுக்காக சாதித்தது என்ன என்று. நான் கேட்கிறேன் ஜஸ்டிஸ் மந்திரிகளைவிட காங்கிரஸ் மந்திரிகள் சாதித்ததை மலையளவு வேண்டாம். மயிர் அளவு சொல் பார்க்கலாம். சரி வாதத்திற்காக நீ சொல்வதை ஒப்புக் கொள்கிறேன், ஜஸ்டிஸ் மந்திரிகள் தமிழுக்காக ஒன்றும் செய்யவில்லை என்று. ஜஸ்டிஸ் மந்திரிகள் சாதிக்காததைச் சாதிக்கத்தானே நீங்கள் ஆட்சி பீட மேறினீர்கள். இப்பொழுது நீங்கள் சாதித்தது என்ன என்று உங்களைக் கேட்டால், இதற்குப் பதில் சொல்லாது, ஜஸ்டிஸ் மந்திரிகள் என்ன சாதித்தார்கள் என்கிறாயே! இது நேர்மையான பதிலா? இப்பதிலை அவர்களிடம் எங்களைக் கேட்கவிட்டு நீங்கள் ஒதுங்கிவிட வேண்டியது தானே! அந்த யோசனையை உனது மந்திரி சகாக்களுக்குச் சொல்வதை விட்டு நாலு கால் பாய்ச்சலில் எங்கள் மீது பாய்கிறாயே ஏன்? உன்னையும்தான் கேட்கிறேன். நீ தமிழுக்காக இதுவரையிலும் என்ன செய்தாய்? திரு என்பதற்குப் பதிலாக ஸ்ரீ என்கிறாய். முன்னால் என்பதற்கு, மாஜி என்கிறாய், இது போலவே நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது தமிழ்க் கொலை செய்து வருகிறாய் காண்டீபத்தில் இந்த லட்சணத்தில் எங்களைக் குறை கூறுகிறாய்! அட மரக்கட்டையே!*

---

* குடிஅரசு, 04.12.1949, பக். 5, 11.

பதுமையின் பிதற்றல்

காண்டீபம் என்ற வார ஏடு. தினசரியின் வெளியீடு. முன்னாள் தினமணி தோழர் சொக்கலிங்கம் அவர்களுக்குப் பாத்தியப்பட்ட ஏடு. முன்பு நடந்த இந்தி எதிர்ப்பைக் கிண்டல் செய்து எழுதிய நண்பர். நாரதர், கானம் ஊதல், உறிஞ்சல், உண்ணல் என்ற தலைப்பைக் கொடுத்து, இந்தி எதிர்ப்புப் பெண்மணிகளை விலை கூறித்தாக்கி எழுதியதின் விளைவால் பேனா நர்த்தனத்தின் பேனாவில் சிக்கி தாக்குண்டு மண்டை உடைந்து, மூளை குழம்பி, மூலையில் முக்காடிட்டுக் கிடந்த அதே தோழர், சொக்கலிங்கம் அவர்களின் தினசரி வெளியீடான காண்டீபம் என்ற இதழ் இப்பொழுது திராவிடர் கழகத்தை மோதுகின்றது. காரணம் அறியாமையோ, அறிந்து கொள்வதற்கு ஆற்றல் இல்லாமையோ என்று கூறிவிட முடியாது. எல்லாம் தெரியும் அந்த ஏட்டிற்கு. **ஆனால்! பணத்திற்கு ஈடு எதுவுமில்லை என்ற எண்ணத்தினால், பணத்திற்கு மண்டியிட்டு மானத்தை விற்று, நாட்டை மறந்து, தன் இனத்தையே காட்டிக் கொடுக்கிறது. எனவே இனப்போராட்டம் செய்யும் திராவிடர் கழகத்தைத் திட்டும் பணியில் ஈடுபட்டிருக்கிறது.** தினசரி வெளியீடு. திட்டுவது தான் திட்டுகிறதே, கொஞ்சம் பகுத்தறிவுடனாவது திட்டுகிறதா! என்று பார்த்தால் அதுவும் இல்லை. பகுத்தறிவு வாதிகள் உலவும் நாடாயிற்றே என்ற பயமாவது இருக்கிறதா? அதுவும் இல்லை. எல்லாம் பணம் செய்கிற வேலை! பதுமை சொன்ன கதை என்ற தலைப்பில் திராவிடர் கழகத்தைத் திட்டி வருகிறது. கேவலம் உயிரற்ற பதுமைதானே, கதை எப்படிச் சொல்லும். செருப்பால் அடித்தாலோ! பெருக்குமாற்றைச் சாணிப்பாலில் முக்கி அடித்தாலும் கூட ஏனென்று கேட்கவா போகிறது. அதற்காக ஏன்? கோபிப்பானேன் என்பீர்கள். ஆம்! உண்மையே. ஆனால் பதுமை சொன்னதாக ஆசை காட்டுகிறாரே.

அவர் உடலில் ஓடும் ரத்தத்தில் ஒரு துளிக்காவது மானம் பிறக்கட்டுமே. தன் மடமையைக் குறித்து வருந்தட்டுமே! என்பதற்காகவாவது ஒரு டோஸ் மருந்து கொடுக்கத்தானே வேண்டும். சரி, இனி பதுமை என்ன சொன்னது என்ற விவகாரத்திற்குப் போவோம்.

வரையில், "காண்டீபம்" போன்ற ஒட்டை எழுத்துக்காரனெல்லாம் நாட்டில் தலை நிமிர்ந்து நடக்கலாம். ஆனால் அந்த வாழ்வு நிரந்தரப் பலனளிக்காது என்பதை மட்டும் மனதில் பதியவைத்துக்கொள்ள வேண்டும்.

வாயில் இருந்துவரும் வார்த்தைகளுக்கு ஒரு அளவு இருக்க வேண்டும். எழுதும் எழுத்துக்களில் நல்ல உயிர்ப்பு மிளிர வேண்டும். பத்திரிகை நடத்தினால் அதற்குரிய பத்திரிகா தர்மம் இருக்கவேண்டும். அவையில்லையேல், அவைகளைச் செத்த பிணத்திற்கே ஒப்பிட வேண்டும். அதுபோலவேதான் "காண்டீபம்" என்ற வார ஏடு, தனக்கே புரியாத எதை எதையெல்லாமோ எழுதுகிறது. பெரியாரை வலுவில் அடிக்கடி இழுத்துப் பேசுகிறது. சம்பந்தமில்லாத வேளைகளிலெல்லாம். சரி எழுதுவதுதான் எழுதுகிறதே, அதற்கும் ஓர் காரணம் வேண்டாமா? அது தான் இல்லை படியுங்கள்.

சர்ச்சில் தன்னுடைய பிறந்த தின விழாவைக் கொண்டாடினாராம். அதற்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகள் போய்க் குவிந்தனவாம். இதில் முதல் வாழ்த்துச் செய்தி பெரியார் ராமசாமி அவர்களினுடையதாக இருக்குமென்று "பதுமை" கூறியதாம். இதைக் கண்டு வாயை இளிக்கிறது காண்டீபம். பார்த்தீர்களா! "காண்டீபம்" தாங்கி வரும் வார்த்தைகளை மனிதனுக்கு உரிய உயர்ந்த குணங்களில் ஒன்றாவது இருக்கிறதா? இக்காண்டீபத்திற்கு. பரத்தையின் வயிற்றில் பெண்கள் பிறந்தாலும் பத்தினிப் பெண் உண்டு. ஆனால் இந்தப் பதுமையார் யார் வயிற்றில் பிறந்து, இவ்விதம் சீரழிக்கிறதோ தெரியவில்லை. பதுமைதானே, அதற்கு ஏதப்பா! தாய் தந்தையர்கள் என்று கூறிவிடாதீர்கள். பதுமையின் திரைமறைவில் கண்டிப்பாக யாராவது இருந்தாக வேண்டும். இல்லாவிட்டால் பதுமை கதை சொல்லுமா?

ஏ! மாமிசப் பிண்டமே, மடாதிபதிகளும், ரமண ரிஷிகளும், சோற்றுத்துருத்திகளும், அவர்கள் தம் பாதந்தாங்கிகளும், தங்கள் பிறந்த தினவிழாவைக் கொண்டாடுவதும், ஒட்டை எழுத்துக்காரனாகிய நீ பத்திரிக்கையில் அதைப் பிரமாதமாகப் பிரசுரிக்கவும் செய்யும்போது சர்ச்சில் தனது பிறந்த தின விழாவைக் கொண்டாடினால் என்ன? அதற்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பினால் தான் என்ன? சர்ச்சில் அதற்கு அருகதை உடையவரில்லையா? நீ போற்றிப் புகழும் தலைவர்களில்

எவரைவிட சர்ச்சில் இளைத்தவர். சொல் பார்க்கலாம். அட வெண்ணை வெட்டி வீரனே! உலகப் போரின் காரணமாக ஒவ்வொரு நாட்டின் தலைவர்களும் திணறிக்கொண்டிருந்த நாளில், தீரத்தோடு உலாவிய வீரபுருசனல்லவா? லண்டன் ஒழிந்துவிடும் என எண்ணி உனது கூட்டம் மாற்றானுக்கு வாசலைக் காட்டிக் கொண்டிருந்த நேரத்தில் எதற்கும் அஞ்சாது உலாவிய எந்தல் அல்லவா? ராசதந்திரி அல்லவா? தன் இனமக்களின் உரிமையை நிலைநாட்டிய பெரும் பேறு படைத்த வீரனல்லவா? சர்ச்சில். அவன் லண்டனுக்கு வாங்கிக் கொடுத்த விடுதலையல்லவா? வாழைப்பழத்தில் ஊசியை இறக்கி, வீரத்தை மெச்சிக் கொண்டிருந்த உனக்கு விடுதலை அளித்தது. அவ்வளவு வல்லமை பொருந்திய சர்ச்சிலுக்கு அந்நாட்டு மக்கள் வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் என்ன வியப்பு. நீ வாழ்த்துச் செய்தி அனுப்பினால் தான் என்ன கேடு. நீ என்றவுடன் உன்னைச் சொல்லிவிட்டதாக எண்ணி உள்ளப்பூரிப்படைந்து விடாதே! உன் வாழ்த்துச் செய்தியை நானே மதிக்காது இருக்கும்போது சர்ச்சில் உன்னை எதிர்பார்க்கவா போகிறார்? சர்ச்சில் தெரியாமல் சொல்லிவிட்டேன். சர்ச்சில் வீட்டின் நகரச்சுத்தி தொழிலாளிகூட உன்னை எதிர்பார்க்க மாட்டான். காரணம் உன்னிடத்தில் ஊதாரித்தனம் இருப்பதால். எனவே அவைகளை மறந்து வீரனை வீரன் போற்ற வேண்டும் என்ற மனிதப் பண்பை மறந்துவிடாதே. மடத்தனமாக உளறாதே. பொருளில்லாக் கதைகளையும், பொருந்தா உவமானங்களையும் அளக்காதே! இவ்விதம் உன் தலையிலேயே குப்பையை வாரிப்போட்டுக்கொள்வது உனக்கே வெட்கமாகத் தோன்றவில்லையா? அல்லது உனது எழுத்துக்களையும் கண்டு, உள்ளப்பூரிப்படைகிறாயோ! ஓட்டை எழுத்துக்காரனப்பா நீ. உன்னை அறியாமலேயே எழுத்துக்கள் ஒழுகிக் கிடக்கின்றன. எனவே எழுதிக் கம்பாசிட்டரிடம் கொடுப்பதற்குமுன் மறுபடியும் வாசித்துக் கொஞ்சம் சிந்தித்துப்பார். அப்பொழுது உண்மை விளங்கும். உண்மையை உனது உள்ளம் உணர்ந்தாலும், வெளிக்குக்காட்டவா போகிறாய். நீ தான் அம்மாமி வர்க்கத்திற்கு அஞ்சிக்கிடக்கிறாயே! சரி உனது இஷ்டம். படுவதை பட்டுத்தானே தீரவேண்டும்.*

---

* குடிஅரசு, 18.12.1948, பக். 10, 11.

* "வாலி" என்ற பெயரும், தூத்துக்குடி வாலி என்ற பெயரும் கே.வி.கே.சாமி அவர்களின் புனைப்பெயராக இருக்கக்கூடும் என்று கருதுகிறேன். அதனால் அந்தக் கட்டுரைகளையும் இங்கே சேர்த்துள்ளேன்.